மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தூத்துக்குடி துறை முகத் திட்டம் அடுத்த வருஷம் முடிந்துவிடும். இந்த வருஷம் அதற்காக 5½ கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்து இருக்கிறது. தூத்துக்குடி திட்டத்தையும், சேது சமுத்திரத் திட்டத்தையும், இரண்டையும் தனியாகப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 34 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

'Standee' buses in City

* 35 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether the 'Standee' buses introduced in city routes provide for 25 sitting passengers;

(*b*) whether a certain number of seats and standing accommodation have been reserved for women;

(*c*) whether these have been introduced only on a few routes; and

(*d*) if so, whether there is any proposal to introduce such buses in all city routes?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) முதல் (எ) வரை ஆம்.

DR. H. V. HANDE: Are the Government aware of the fact that because more than 25 persons had to stand in the bus and a great amount of inconvenience takes place and because of these large number of people of standees the springs of the buses and other parts get spoiled? Will the Government see to it that buses are built to withstand this load also? Will the Government think of an alternative method by which these uncomfortable passengers are allowed to sit and travel comfortably?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பஸ் ஸ்டாண்டில் நிற்பதை விட, பஸ்ஸில் நிற்பது மேல் என்று மக்கள் கருதுகிறார்கள். நிற்பது அசௌகரியமாக இருக்கிறது என்று பொதுமக்களிடமிருந்து இதுவரை எந்தவிதமான புகாரும் வந்ததாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, பிரயாணிகள் நிற்பதற்கான அனுமதி பெற்றுத்தான் அந்தப் பேருந்துகள் விடப்படுகின்றன. சமீபத்தில் வேறு ஒரு வகையான பேருந்து ஒன்றை உருவாக்கி, பெண்கள் ஒரு பக்கம், ஆண்கள் ஒரு பக்கம் உட்காரும் வகையிலும், அதிகமான பிரயாணிகள் நடுவில் நிற்பதற்குமான வகையிலும் கட்டப்பட்டு இருக்கிறது. அந்த பஸ்ஸில் 10 பெண்களும், 20 ஆண்களும், ஆக 30 பிரயாணிகள் நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இந்தப் புது விதமான வண்டி இப்போது நெரிசல் அதிகமான இடங்களுக்குப் பரீட்சார்த்தமான முறையில் விடப்பட்டு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நின்று பயணம் செய்வதற்கு சௌகரியமாக இருப்பதற்காக வேண்டி போடப்பட்டு இருக்கும் பிடிகள் அங்கும் இங்கும் நகர்வதால், பிடித்துக்கொண்டு இருப்பவர்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பிடிகள் நகராமல் இருக்கும் வகையில் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் சொன்ன கருத்து பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொஞ்சம் குள்ளமாக இருப்பவர்களுக்கு எட்டவில்லை என்பதால், அவர்களுக்கு எட்டுகிற வகையில் பிடிகள் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அமைச்சரவர்கள் தவறாக நினைக்கக் கூடாது. உயரமானவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய வசதியை எண்ணி மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் சொன்ன யோசனையை மறுபரிசிலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru S. RAMACHANDRAN : Average height will be taken into consideration.

திருமதி த. ந. அனந்தநாயகி : முன்பு போக்குவரத்துத் துறையால் அடையார் பகுதிகளுக்குச் செல்லும் பஸ்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதே. இப்போது மீண்டும் அந்தப் பகுதிகளுக்கு அந்தப் பஸ்களைப் போடமுடியுமா? அரசு அதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போதுள்ள டெப்போக்களில் அதிகமாக பஸ்கள் இருப்பதால், டெப்போக்களை மாற்றி அமைக்கும் திட்டம் இருக்கிறது. மாற்றி அமைக்கப் படுகிற நேரத்தில் இது கவனிக்கப்படும். இப்போது அடையார் டெப்போவில் இருக்கும் பஸ், டி.வி.எஸ். பஸ் நிறுவனத்தில் உள்ள பேருந்து எண்ணிக்கைக்குச் சமமாக இருக்கிறது.

Dr. H. V. HANDE : The Hon. Minister has said that it would be better to be inside than on the platform or bus stop. My point is why should the passengers be made so uncomfortable? Is there no solution? At present the number of standees is increasing, and in a bunch of 10 to 12, they are holding together and not only that, they have to travel on the footboard which is risky. Will the Government, instead of increasing the number of standees, increase the number of buses and provide more comfort to the passengers? What are the steps taken by this Government in providing more comfort? That is the question I am asking.

[1971 ஜூன் 23

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, இன்னும் குறிப்பிடத்தக்க அளவில், நின்று கொண்டு பிரயாணம் செய்வது அசௌகரியமாக இருக்கிறது என்று ஒரு பெடிஷன் கூட பொதுமக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்திருப்பதாக தெரியவில்லை. அது மட்டுமல்லாமல், இப்போது அந்தப் பஸ்கள் மிக நெரிசல் நிறைந்த பகுதியில் மட்டும் விடுமாறும், ஷார்ட் டிரிப்பிற்கு மட்டும் விடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. கொஞ்சம் நீண்ட தூரம் போகவேண்டிய இடத்திற்கு அவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்றும் அண்மையில் 14—6—1971 அன்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்த பஸ்ஸை ஷார்ட் டிரிப்பிற்குப் பயன்படுத்துவதாலும், நெரிசல் நிறைந்த பகுதியில் பயன்படுத்துவதாலும், அது நெரிசலைக் குறைக்கப் பயன் உள்ளதாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். முகம்மது காதர் முகைதீன் : தலைவர் அவர்களே, பஸ்களிலே பிரயாணம் செய்யக்கூடிய எம்.எல்.ஏ.-க்களுக்கு அனுமதி அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அவ்வாறு அனுமதி கொடுக்கும்போது, தூர பஸ்களிலேயும், டவுன் பஸ்களிலேயும், எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-களுக்கு என்று இரண்டு சீட்டுகள் ரிசர்வ் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு: இப்பொழுதே இருக்கிறது.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே துரித வண்டிகளில் அந்தவிதமான வசதி, முன்னரே தெரிவித்துவிட்டால், செய்யப்படுகிறது. நான் குறிப்பிட்டது இலவசமாகப் பிரயாணம் செய்வது பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) வெட்டுத்தீர்மானங்கள் கொடுப்பதற்கான காலநீட்டிப்பு குறித்து.

MR. SPEAKER : I have to announce to the House that the time for receipt of cut motions in regard to Demands 1 to 25 has geen extended till 3 p.m. on 24th June 1971.

3. நடைமுறைக் கேள்வி.

மத்திய விஞ்ஞான-தொழில் ஆராய்ச்சி நிலையத் தொடக்க விழாவிற்கு அமைச்சர்களுக்கு அழைப்பு அனுப்பாதது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order under Rule 83 The Hon. Chief Minister while making a statement yesterday submitted to this House that he had not been invited for a particular function organised by the CSIR—Council of Scientific and